Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MAY 15, 2024

புதன்கிழமை மே 15, 2024 | ஒளி: 09 கதிர்: 252 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# சா/த பெறுபேறுக்கு முன் உ/த ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகுவதற்கு முன்னதாக உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (14) கூடிய அமைச்சரவையில், கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிவரும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த புதிய திட்டத்திற்கு மாகாண ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளின் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களை உயர் தரத்துக்காக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்புகள் நடத்தப்பட்டாலும், குறிப்பிட்ட பாடத்திட்டம் உரிய பாடசாலையில் கற்பிக்கப்படாவிடின், அப்பாடத்திட்டம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டமையினால், தவறவிடப்பட்ட கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாடசாலை பரீட்சை அட்டவணைகளை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு அமையவே இந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில்- முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, பொலிஸாரின் கடுமையான தடைகளையும் மீறி, பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், செவ்வாய்க்கிழமை (14) விநியோகிக்கப்பட்டது.

கஞ்சி வாரத்தின் 3 நாள் கஞ்சி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்றது. அதில், பங்குபற்றச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளரைப் பங்கு கொள்ளவிடாது பொலிஸார் விரட்டியடித்தனர்.

தமிழன அழிப்பின் கஞ்சி வாரத்தையிட்டு, மட்டக்களப்பு நகர் சுமைதாங்கி சந்தியிலுள்ள விநாயகர் ஆலய முன்றலில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் கஞ்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் லவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டு கஞ்சி காய்ச்சும் நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது, பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் அங்குச் சென்ற பொலிஸார்,

தொடர்ச்சி P2



# தமிழர்களுக்கு என்ன செய்தது

## சுமந்திரன் கேள்வி; இலங்கையின் நயவஞ்சகம் என்கிறார்



பலஸ்தீனத்தில் நடக்கும் இனப் படுகொலைதான் இலங்கையில் தமிழர்களுக்கும் நடந்தது, ஆனால், பலஸ்தீனத்திற்காக குரல் கொடுக்கும் இலங்கை, தமிழர்களுக்கு என்ன செய்தது? இதுதான் இலங்கையின் நயவஞ்சக தன்மை மற்றும் இரட்டை வேடம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற பலஸ்தீனத்தில் இன்றைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், பாலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை மிகவும் பாரதூரமானது. இந்த நிலைமையை யாரும் சாதாரணமாக கருதக் கூடாது.

இந்நிலையில், இந்த பாராளுமன்றத்தில் இருதலைப்பட்சமாக நடந்துகொள்பவர்களும் இருக்கின்றனர். அவர்களின் செயற்பாடு நயவஞ்சகமானது. மனித உரிமைகள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பேசுகின்றனர். ஒரு நாட்டுக்குள் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டு பலஸ்தீன நிலைமை குறித்து பேசுகின்றனர்.

தொடர்ச்சி P2

# “பலஸ்தீன பேரழிவை ஊடகங்கள் மறைக்கின்றன”



பலஸ்தீன மண்ணில் ஆறு மாதங்களுக்கும் மேலாக நடத்தப்பட்டு வரும் இனப்படுகொலைகள் மற்றும் பேரழிவை உலகின் பலம் வாய்ந்த ஊடகங்களும், நமது நாட்டின் சில பலம் வாய்ந்த ஊடகங்களும் மூடி மறைத்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14)

தொடர்ச்சி P2

# மின்னல் தாக்கத்தில் கால்நடைகள் பலி

நவி



கம்பளை- கலமுதுன, மீனகொல்ல தோட்டப் பகுதியில் திங்கட்கிழமை (13) பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்ற மின்னல் தாக்கத்தில், மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த 11 கால்நடைகளில், மூன்று கரவை பசுக்கள் உட்பட நான்கு கால்நடைகள் பலியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

# பலஸ்தீனர்களுக்காக ஆதரவு ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலுடனான மோதலில் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் வகையில், கொழும்பு, நூலக சுற்றுவட்டாரத்தில், செவ்வாய்க்கிழமை (14) ஆதரவு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் சுதந்திர பலஸ்தீனத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




# “பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார்”



பலஸ்தீன் விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரட்டை வேடம் போடுகின்றார். அவர் பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார் என குற்றஞ்சாட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் இந்த அரசாங்கம் அமெரிக்காவின் அடிமை என்றார்.

தொடர்ச்சி P2

# விஜயதாசவுக்கு எதிராக வழக்கு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ செயற்படுவதைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) வழக்குத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் சரத் ஏக்கநாயக்க, அமைச்சர் விஜயதாச ராஜபக் உள்ளிட்ட ஐவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# புலிகள் மீதான தடையை நீடித்தது இந்தியா



மக்கள் மத்தியில் பிரிவினைவாதப் போக்கினைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கான ஆதரவுத் தளத்தை மேம்படுத்துகிறது என்பதால் இந்தியா, விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இன்னும் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மத்திய அரசு கருதுவதாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

2009 மே மாதம் இலங்கையில் தோல்விக்குப் பிறகும்

தொடர்ச்சி P2

# “தனி ஈழம் வெற்றி பெறும்”



தமிழர்களுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வடக்கு கிழக்கில் தனி ஈழத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கும் அடிப்படைவாத நோக்கம் வெற்றி பெறும் என்று ஆளும் தரப்பு எம்.பியான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “அரிசியை உண்ட கோழிகள் இறந்தன”



குறைந்த வருமானமுடையவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் அரிசியை உண்ட கோழிகள் இறந்தன என குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இதற்கு அரசாங்கத்தின் பதில் என்னவென்று வினவினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் நிவாரண அரிசியின் தரம் தொடர்பில் கடந்த காலங்களில் கேள்விகளும் எழுந்திருந்தன.

தொடர்ச்சி P2




# “சுவசெரியவை நிறுத்தாதீர்கள்”

சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவைத் திட்டத்தை இடைநிறுத்த இடமளிக்க வேண்டாம்.என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மின்னல் தாக்கத்தில்...

அந்த தோட்டத்தில் வசித்துவரும் சக்திவேல் சந்திரகுமார் என்பவருடைய கால்நடைகளே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி மரணித்துள்ளன. இவரது குடும்பத்தில் ஆறு அங்கத்தவர்கள் உள்ளனர். கால்நடைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலேயே வாழ்க்கையை அவர் நடத்திவருகின்றார்.

கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டிருந்த பிரதேசத்தில், சம்பவ தினத்தன்று கடுமையான மழை பெய்ததுடன், மின்னல் தாக்கமும் ஏற்பட்டது என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை குறுந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## "அரிசியை உண்ட கோழிகள் இறந்தன"

இந்நிலையில், பாணகமுவ பிரதேசத்தில் கிராமத்தவர் ஒருவர் பெற்றுச் சென்ற அரிசியை அவர் வளர்க்கும் கோழிகளுக்குப் போட்டபோது, அதனை உண்ட 7 கோழிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் அறிந்துள்ளதா? என்று கேட்டார்.

இதன்போது குறிப்பிட்ட சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, உடனடியாக இது தொடர்பில் பதிலளிக்க முடியாது. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் சில வாரங்களுக்கு முன்னர் இது போன்ற கேள்வியொன்று கேட்கப்பட்டது என்றார்.

## "பலஸ்தீன பேரழிவை ஊடகங்கள் மறைக்கின்றன"

இடம்பெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சியைக் காப்பாற்றிய சக்திகள், அதேபாணியில் இன்றும் பலஸ்தீன மண்ணில் நடக்கும் அநீதி, அடக்குமுறைகளை மூடி மறைத்து, உலக மக்கள் ஆணைக்கு எதிராகச் சென்று, பிரிவினைவாத, மனிதாபிமானமற்ற ஆட்சிக்கு அடைக்கலம் கொடுக்க முயல்கின்றன.

பலம் வாய்ந்த ஊடகங்களும் மூடி மறைத்து வந்தாலும், சமூக ஊடகங்கள் வாயிலாகப் பாலஸ்தீனத்தின் யதார்த்தம் ஏறக்குறைய சமூகத்திற்கு அம்பலமானது.

கடந்த வாரம், ஐ.நா. சபையானது பாலஸ்தீன அரசுக்கு புதிய உரிமைகள் மற்றும் சலுகைகளை வழங்கும் தீர்மானத்தைப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியது. இது ஐக்கிய நாடுகள் சபையில் முழு அங்கத்துவத்திற்கு வழி வகுத்தது. இந்த முன்மொழிவு தொடர்பான விவாதத்தின் போது, இஸ்ரேலிய பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றினார் மற்றும் இந்த முன்மொழிவு நிறைவேற்றப்பட்டால், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளுக்கான அமெரிக்க உதவியைக் குறைக்க எதிர்பார்க்கிறேன் என்று அச்சுறுத்தினார். இந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது 143 நாடுகள் இந்த திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உட்பட ஒன்பது நாடுகள் மட்டுமே இதை எதிர்த்தன.

சுதந்திரம், மனித உரிமைகள், நிறவெறி அல்லது இனவெறி போன்றவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் ஒரு நாட்டின் வீட்டோ அதிகாரத்தால் செல்லாததாக்கப்படுவதை நாம் காண்கிறோம். சர்வதேச நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றுக்குத் தொடர்ந்து சவால் விடுப்பதை நாம் இன்னும் பார்க்கிறோம் என்றார்.

## புலிகள் மீதான தடையை நீடித்தது இந்தியா



விடுதலைப் புலிகள் 'ஈழம்' (தமிழர்களுக்கான சுதந்திர நாடு) என்ற கருத்தைக் கைவிடவில்லை என்றும், நிதி சேகரிப்பு மற்றும் ஈழத்துக்காக இரகசியமாகச் செயல்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் எஞ்சியிருக்கும் புலிகளின் தலைவர்கள் அல்லது அங்கத்தவர்கள் சிதறிய செயற்பாட்டாளர்களை மீண்டும் ஒருங்கிணைத்து உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இந்த அமைப்பினை மீண்டும் எழுப்புவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

"விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள்/கூறுகள் மக்கள் மத்தியில் பிரிவினைவாதப் போக்கைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுத் தளத்தை மேம்படுத்துகின்றன.

இது இறுதியில் இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டின் மீது வலுவான சிதைவை மேற்கொள்வதற்கான செல்வாக்கைக் கொண்டிருக்கும்" என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம்

முகக்கவசம், தலைக்கவசம், கையுறை பாவிக்கவேண்டும் சுகாதாரமாகக் காய்ச்சவேண்டும் என பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து கஞ்சியைக் காய்ச்சவிடாது தடைகளை ஏற்படுத்தினர்.

பொலிஸாருடனும் பொதுச் சுகாதார பரிசோதகருடனும் கடும் வாக்குவாதங்களில் ஈடுபட்ட, அங்கிருந்த மக்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் கஞ்சியைக் காய்ச்சினர்.

அதன்பின்னர், வீதியால் சென்ற மக்களுக்குக் கஞ்சியை வழங்கு விடாது போக்குவரத்து பொலிஸார் குவிக்கப்பட்டு அந்த பகுதியில் வாகனங்களோ, மோட்டார் சைக்கிள்களையோ நிறுத்த விடாது தடைகளை ஏற்படுத்தினர்.

கஞ்சி வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸின் மோட்டார் சைக்கிளை அங்கு நிறுத்த விடாது பொலிஸார் தடுத்தனர். இதனையடுத்து, அவருக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது, அவரின் போக்குவரத்து ஆவணங்களைச் சோதனை செய்த பொலிஸார், கஞ்சு வழங்கும் நிகழ்வில் பங்கு கொள்ள விடாது தடுத்து விரட்டியடித்தனர்.

## தமிழர்களுக்கு என்ன செய்தது

பலஸ்தீனத்தில் அதிகளவான மக்கள் கொலை செய்யப்பட்டுக் குவிக்கப்படுகின்றனர். இவர்களின் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களும் பெண்களும் ஆவர். இந்த யுத்தத்தைப் பொறுத்தவரையில் ஹமாஸ் - மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலாகும்.

இலங்கையிலும் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டது. அதனை உள்விவகாரம் என்றும், சர்வதேச குற்றச் செயல் அல்ல என்றும் கூறியவர்கள் பலஸ்தீன சம்பவத்தை உள்விவகாரம் என்று கூறுவதில்லை.

மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த மக்களை நினைவு கூரும் வாரமாக இந்த வாரம் இருக்கின்றது. போர் வலயத்திற்குள் 4 இலட்சம் மக்கள் சிக்கியிருந்தனர்.

அவர்கள் உண்ண உணவின்றி கஞ்சியையே அருந்தினர். அதனை நினைவு கூரும் வகையில் அங்கு கஞ்சி பரிமாறப்படுவது வழக்கமாகும். இதனை இலங்கையில் யுத்தத்தில் ஏற்பட்ட மக்கள் இழப்புகளை நினைவு கூரும் நாளாகவே பார்க்கின்றோம். இஸ்ரேலியர்கள் பானை உண்டு நினைவு கூருவதைப் போன்றே இங்கேயும் கஞ்சி பருகிச் செய்கின்றனர்.

எமது மக்கள் இறுதிக்கட்ட யுத்தக் காலத்தில் கஞ்சியைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாது இருந்ததுள்ளனர். இதனை நினைவுகூர இடமளிக்காமை அரசாங்கத்தின் அவல நிலைமையையே எடுத்துக்காட்டுகினறது.

இந்த விடயத்தில் சம்பூரில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட முறையைப் பார்த்தோம். குறித்த பெண், ஆண் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்படுகின்றார்.

கஞ்சியை அருந்தியதாகவே அவரை இழுத்துச் செல்கின்றனர். கஞ்சி விவகாரத்தில் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவுகளையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த நேரத்தில் பலஸ்தீனத்தில் இறக்கும் மக்கள் தொடர்பில் பேசிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இங்கே இறந்தவர்கள் தொடர்பில் நிலைப்பாடு என்ன என்று கேட்கின்றோம். இது இரட்டை நிலைப்பாடு இல்லையா? பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்று கேட்கின்றேன். பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும், சர்வதேச தலையீடு அவசியம் என்றும் கூறும் நீங்கள் ஏன் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும் போது உள்ளக விவகாரம் என்று கூறுகின்றீர்கள். இது இரட்டை வேடத்தையே காட்டுகின்றது.

யுத்தம் என்பது சுத்தமானதாக இருக்க முடியாது. ஒரு சுதந்திரமான விசாரணை அவசியமாகும். ஆனால் இங்கே உள்ளக விசாரணை தொடர்பில் கூறிக்கொண்டு ஒரு தரப்பு விசாரணையை முன்னெடுக்கின்றனர்.

இஸ்ரேல் தாக்குதலை நாங்கள் கடுமையாக கண்டிக்கின்றோம். ஆனால் அதே மனசாட்சியுடன் இங்கு 15 வருடங்களுக்கு முன்னர் நடந்தவை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்நிலையில் உள்ளக பொறிமுறை என்று கூறிக்கொண்டு ஏன் இவ்வாறு நயவஞ்சகமாகச் செயற்படுகின்றீர்கள் என்று கேட்கின்றேன் என்றார்.

## "தனி ஈழம் வெற்றி பெறும்"



இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகச் சாட்சியம் திரட்டும் நடவடிக்கைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை இராணுவத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடுவதாக ஐ. நா. சபையின் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளமை சாதாரண விடயமல்ல என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

இஸ்ரேல் நாட்டில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சியின் மீது பலஸ்தீனம் தாக்குதல் மேற்கொண்டதன் பின்னரே இரு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. யுத்தம் கொடுமையானது. யுத்தத்தின் போது இரு தரப்பிலும் இழப்புக்கள் நேரிடும். அப்பாவி மக்களே கொல்லப்படுவார்கள்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யுத்தம் தீவிரமடைந்துள்ள நிலையில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயற்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

30 வருட கால யுத்தத்தின் போது இஸ்ரேல் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் வெட்டிக் கொலை செய்யும் போது புலிகளுக்கு எதிராக அமெரிக்கா எவ்வித பிரேரணைகளையும் கொண்டு வரவில்லை. அதேபோல் இலங்கை இராணுவத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரேரணைகளைக் கொண்டு வரவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு அப்பாவி மக்களைக் கொலை செய்து கொண்டிருந்த போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தி அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு,அரசியல் தீர்வு குறித்து ஆராயுமாறு அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்தது.

விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க 29 ஆயிரம் இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்தார்கள். இந்த தியாகத்துக்கு தற்போது மதிப்பளிக்கப்படுகிறதா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ளது. இராணுவத்தினருக்கு எதிராகச் சாட்சியம் திரட்டும் நடவடிக்கைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை இராணுவத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார் . இது சாதாரணமானதல்ல.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வெளியக பொறிமுறை நீடித்தால் இலங்கையில் சுயாதீனத்துக்குப் பாதிப்பு ஏற்படும்.

தமிழர்களுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வடக்கு கிழக்கில் தனி ஈழத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கும் அடிப்படைவாத நோக்கம் வெற்றிபெறும் என்றார்.

## "சுவசெரியவை நிறுத்தாதீர்கள்"

கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் எண்ணக்கருவாக ஆரம்பிக்கப்பட்ட சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவையின் 322 அம்பியூலன்ஸ் வண்டிகளில் 56 வண்டிகள் செயலிழந்துள்ளன. அவற்றில் பணிபுரிந்த சாரதிகளும் அவசர சேவை உத்தியோகத்தர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அம்பியூலன்ஸைப் புதுப்பித்தல், ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தல் போன்றவற்றில் அரசாங்கத்தின் கவனம் குறைந்துள்ளமையினால், இது தொடர்பில் அவதானம் செலுத்துங்கள். சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவைத் திட்டத்தை இடைநிறுத்த இடமளித்து விடாதீர்கள் என்றார்.

## "பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார்"

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அன்று யூதர்கள் கொல்லப்பட்ட அதே வழியில் இஸ்ரேல் அரசாங்கம் பலஸ்தீனர்களை கொலை செய்வதைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இஸ்ரேல் என்று சொல்லும்போது, ஒட்டுமொத்த உலகமும் பேசமுடியாது திராணியற்று இருக்கின்றது. எந்த பலஸ்தீனியரும் அந்த பிரதேசத்தில் இருக்கக்கூடாது என்ற சித்தாந்தத்திலேயே இஸ்ரேல் உள்ளது.

இஸ்ரேல் அரசாங்கத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும் என தென்னாபிரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு ஆதரவளிப்பதாக எகிப்து அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதேபோன்று பல நாடுகளும் அதற்கு ஆதரவளித்து வருகின்றன.

ஆனால், பிராந்தியத்தில் சில நாடுகள் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை இன்னும் பேணிக்கொண்டு வருகின்றன.

எமது அரசாங்கம் இந்த தீர்மானத்தில் இருக்கிறது. அண்மையில் எமது வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இந்த சபையில் உரையாற்றும்போது, தாங்கள் இஸ்ரேல், ஈரான் உறவைச் சமநிலைப்படுத்தியதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஈரான் ஜனாதிபதி இங்கு வந்தார், நாங்கள் செங்கடலுக்கு எமது படைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

இது வெட்கப்படவேண்டிய விடயம். இதுதானா அரசாங்கத்தின் இராஜதந்திர உறவின் முன்னேற்றம்? அதேநேரம் பலஸ்தீன் விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரட்டை வேடம் போடுகின்றார். அவர் பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார். அமெரிக்கக் கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறது. இந்த அரசாங்கம் அமெரிக்காவின் அடிமையாகவே உள்ளது என்றார்.

## "பலஸ்தீன அமைதிக்காக குரல்கொடுப்போம்"



பலஸ்தீன மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் நீங்கி, அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற பலஸ்தீனத்தில் இன்றைய நிலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பலஸ்தீன - இலங்கை ஒத்துழைப்பு அமைப்பின் ஆரம்ப தலைவர் என்ற ரீதியில் பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக நாங்கள் குரல் கொடுத்தோம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அன்று முதல் இன்று வரையில் பலஸ்தீனத்திற்காகவும் அந்த மக்களுக்காகவும் முன்னிற்கின்றோம். அங்குள்ள நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டுமென்று அந்த விடயத்தில் தலையிடும் அனைத்து தரப்பினருக்கும் நாங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். 7 தசாப்தங்களாக தொடரும் பலஸ்தீன - இஸ்ரேல் நெருக்கடி தொடர்பில் உலக அரசியல் தொடர்பில் அறிந்த அனைவருக்கும் புரிந்துகொள்ள முடியும். ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றும் சந்தர்ப்பங்களில் பலஸ்தீனத்தை சுயாதீன நாடாக அறிவிக்க வேண்டும் என்றும் அந்த மக்களுக்கு சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

எவ்வாறாயினும் யுத்தம் இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையாது என்பதனை கடுமையாகக் கூறிக்கொள்கின்றோம். இப்போது காசா எல்லையில் ஏற்பட்டுள்ள நிலைமை மிகவும் அவலமானது. 30 வருட யுத்தத்திலிருந்த எங்களுக்கு இதனைப் புரிந்துகொள்ள முடியும். பலஸ்தீனத்தில் பெருமளவானவர்கள் உயிரிழக்கின்றனர் என்றார்.



நாடளாவிய ரீதியில்

# ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் செயற்படும் 18,000 முன் பள்ளி பாடசாலைகளை முறைப்படுத்தி ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். அதற்கான முக்கியமான வேலைத்திட்டம் அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் என்றும் நாடளாவிய ரீதியில் உள்ள 26 திறந்த பல்கலைக்கழக கிளைகளின் ஒத்துழைப்புடன் அந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) முன் பள்ளிகள் மற்றும் முன் பள்ளி ஆசிரியர்களுக்கான தகைமை தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பி. ஹேஷா விதானகே எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி அமைச்சர் கூறுகையில், 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்போது மொன்டிசரி என்ற விடயம் மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்டது. அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சராக இருந்த காமினி ஜயவிக்ரம் பெரேராவே அதற்கான அடித்தளத்தை இட்டார். அதனை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, நானும் மேல் மாகாண முதலமைச்சராக அப்போது அதை மேல் மாகாணத்தில் அறிமுகப்படுத்தினேன். அந்த வகையில், தற்போது ஒன்பது மாகாணங்களிலும் அது நடைமுறையில் உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்த முன் பள்ளி செயற்பாடுகள் ஐந்து விதமாக இடம்பெறுகின்றன. கிராமங்கள் மற்றும் நகரங்களில் தனித்தனியே இந்த முன் பள்ளிகள் இயங்குகின்றன. அமைப்புகளினாலும் முன் பள்ளி நடத்தப்படுகின்றன. அத்துடன் மாகாண சபைகளாலும் இவ்வாறான முன் பள்ளி பாடசாலைகள் செயற்படுத்தப்படுகின்றன. சில பிரபல பாடசாலைகள் அதனோடு இணைந்ததாக இவ்வாறான முன் பள்ளிகளை நடத்துகின்றன. அத்துடன் சர்வதேச பாடசாலைகளோடு இணைந்ததாகவும் முன் பள்ளி பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் 18, 800 முன் பள்ளி பாடசாலைகள் நாட்டில் இவ்வாறு இயங்குகின்றன.

கல்வி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையின்படி, ஒன்பது மாகாணங்களிலும் அது தொடர்பான 9 அதிகார சபைகள் காணப்படுகின்றன. அந்த அதிகார சபையின் உறுப்பினர்களை நாம் இந்த தெரிவுக்குழுவுக்கு அழைத்தோம். அதன் பின்னர் தேசிய கல்வி நிறுவன அதிகாரிகளையும் திறந்த பல்கலைக்கழக உத்தியோகத்தர்களையும் அழைத்தோம்.

இந்த நிறுவனங்களின் மூலம் தான் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ வழங்கப்படுகிறது. அவர்களுடனான கலந்துரையாடலில் யுனிசெப் நிறுவனத்தின் அறிக்கையை அடிப்படையாக வைத்து விடயங்களை முன் வைத்தோம். அதன்படி தற்போது முன் பள்ளிகளில் கல்வி கற்கும் பிள்ளைகளில் 20 வீதமானோர் பாடசாலைகளுக்கு இணைக்கப்படுவதில்லை. அவர்களே பாடசாலைகளுக்கு முதலாம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். கல்வியமைச்சானது தற்போது முதல் கட்ட பயிலுனர்களை தெரிவு செய்துள்ளது. அனைத்து மாகாணங்களிலுமிருந்து பயிற்சி அளிக்கப்பட்ட 550 பேருக்கு ஆரம்ப அடிப்படை பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். கல்வியமைச்சின் பணிப்பாளர் ஒருவரும் அந்த நடவடிக்கைகளில் தொடர்பு படுகின்றார்.

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் நாம் அனைத்து பாடசாலைகளையும் அழைத்து ஆரம்ப பாடசாலை தொடர்பான முழுமையான செயலமர்வை நடத்தி முடித்தோம். அந்த வகையில் உரிய புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் இரண்டாம் தவணை பாடசாலைகள் ஆரம்பமாகும் போது அவர்கள் அனைவருக்கும் பயிற்சி வழங்குவோம் என்றார்.

## புகையிரத்தில் மோதுண்டு ஒருவர் பலத்த காயம்

எச்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி செவ்வாய்க்கிழமை (14) வந்த புகையிரத்தில் மோதுண்ட நபர் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சம்பவத்தன்று காலை 06.10க்கு புறப்பட்ட உதேதேவி புகையிரத்தில், வாழைச்சேனைக்கும் புனானைக்கும் இடையில் காலை 07.20 அளவில் பொத்தானை புகையிரத கடவையில் வைத்தே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓட்டமாவடி-காவத்தமுனை ஹிஸ்புள்ளாஹ் வீதியைச் சேர்ந்த முஸ்தபா லெப்பை றம்ஸான் என்ற 39 வயதுடைய நபரே இவ்வாறு விபத்துக்குளாகியதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், இவ் விபத்து தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் நியமனம்

சிவா ஸ்ரீதரராவ்

சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் செயலாளராக சுஜீவா புஷ்ப குமாரி போதிமான்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திஸாநாயக்கவினால் இரத்தினபுரியில் அமைந்துள்ள, ஆளுநரின் அலுவலகத்தில் வைத்து திங்கட்கிழமை (13) வழங்கி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் விஜேரத்ன தேவகெதர, ஆளுநரின் செயலாளர் தர்ஷன சமரசேகர, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சி, மாகாண சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சஞ்சீவ கொடல்லவத்த, மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தினிஷா எஸ். ரத்நாயக்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.



## யாழில் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் முற்றுகை

நிதர்ஷன் வினோத்

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருளை விற்பனை செய்யும் கும்பலைத் தேடிச்சென்றபோது, வீடொன்றில் இயங்கிய போதைப்பொருள் உற்பத்தி நிலையம் திங்கட்கிழமை (13) யாழ். பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.





யாழ்ப்பாணத்தில், ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே குறித்த போதைப்பொருள் உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

முற்றுகையிடப்பட்ட நிலையம், இரசாயாண ஆய்வுக் கூடத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டு இரசாயனங்களைப் பயன்படுத்தி போதைப்பொருள் உற்பத்தி நடைபெற்றதாகச் சட்ட வைத்திய அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டு செவ்வாய்க்கிழமை (14) உறுதிப்படுத்தினார்.

வாள் வெட்டு கும்பலொன்றில் இயங்கும் ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலேயே குறித்த நிலையம் இயங்கியுள்ளதுடன் பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு எவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், போதைப்பொருள் ஆய்வுகூடத்தில் பிரதான குற்றவாளிகளை தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதியுடன் டொனால்ட் லு சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு, (Donald Lu) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை திங்கட்கிழமை(13) சந்தித்துள்ளார்.

இதன்போது, இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் டொனால்ட் லூ பாராட்டியுள்ளார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொழும்பகே உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## யாழ். சிறைச்சாலை பேருந்து விபத்து; ஒருவர் வைத்தியசாலையில்

எம்.றொசாந்த்

யாழ். சிறைச்சாலைக்குக் கைதிகளை ஏற்றிச் சென்ற, சிறைச்சாலைக்கு சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று திங்கட்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.



ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் கைதிகளை யாழ். சிறைச்சாலைக்கு ஏற்றிச் சென்றபோது, நாரந்தனை பகுதியில் வைத்து முன்னால் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் திடீரென நிறுத்தப்பட்டமையால், பின்னால் பயணித்த சிறைச்சாலைக்குச் சொந்தமான பேருந்து அதில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில், ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சிறைச்சாலை பேருந்திலிருந்த கைதிகள் வேறு வாகனத்திற்கு மாற்றப்பட்டு, சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஆணின் சடலம் மீட்பு

செ.திவாகரன் டி.சந்ரு

நுவரெலியா லவர்சீலிப் பகுதியிலுள்ள வனப்பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை (14) மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய மீட்கப்பட்டுள்ள குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணவில்லை எனவும் உயிரிழந்தவரின் அங்க அடையாளங்களைக் கொண்டு 50 தொடக்கம் 60 வயதாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்



இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கைவரிசையை காட்டிய சிறுவன் கைது

நவி

கலஹா நகரில் உள்ள இரு வீடுகளும், ஒரு வியாபார நிலையமொன்றும் உடைக்கப்பட்டு, தங்க நகைகள், ஆப்பிள் கையடக்க தொலைபேசி மற்றும் மவுன்டன் துவிச்சக்கரவண்டி ஒன்றும் ஞாயிற்றுக்கிழமை(12) திருடிச் சென்றுள்ளதாக சம்பந்தப்பட்ட உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, கலஹா நில்லம்பை பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் மேலும் குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தின் முன்னிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## “மதுபான அனுமதி அரசியல் சூதாட்டம்”

மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் மதுபான கடைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இது அரசியல் சூதாட்டமாகும். இது குறித்து அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(13) நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, மதுபான அனுமதிப்பத்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாகது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் முறையான திட்டமிடல் இல்லாமல் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டதால் கலவரங்களும் இடையூறுகளும் ஏற்பட்டன. மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் மதுபான கடைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இது அரசியல் சூதாட்டமாகும். இது குறித்து அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும். 2022 ஜூலை முதல் தற்போது வரை மது விற்பனைக்கான உரிமப் பத்திரங்களைப் பெறக் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான தகவல்களையும், இந்நிறுவனங்களின் பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் குறித்தும் விளக்கம் அளிக்க வேண்டும். கோரிக்கைகளின் பிரகாரம் உரிமப் பத்திரம் வழங்கப்பட்டவர்களது விபரங்கள் குறித்தும், இவற்றை வழங்குவதில் பயன்படுத்தப்படும். அளவுகோல்கள் மற்றும் நிராகரிக்கப்பட்டவை எவை என்பது குறித்தும், மதுபான அனுமதிப் பத்திர அரசியல் சூதாட்டத்தில் யார் ஈடுபட்டுள்ளனர் என்பது குறித்தும் தெரிவிக்க வேண்டும் என்றார்.

# இரண்டாவது தடைத்தாண்டலில் இனியும் விளையாட வேண்டாம்

பாடசாலை வாழ்க்கையில், மாணவர்களுக்கு மூன்று தடைத்தாண்டல்கள் மிக முக்கியமானவையாகவே கருதப்படுகின்றது. அதில், தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை இரண்டாவது தடைத்தாண்டலாகவும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இறுதி தடைத்தாண்டலாகவும் கணிக்கப்படுகின்றது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியோர், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விக் கலாசாலைகளுக்குச் சென்று இன்றேல், ஏனைய தொழில்துறைகளுக்குள் சென்று, பல பரீட்சைகளுக்கு முகங்கொடுத்து முன்னேறிக் கொண்டே செல்வர். எனினும், மேலே குறிப்பிட்ட மூன்று தடைத்தாண்டல் பரீட்சைகளும் முக்கியமானவையாகவே கருதப்படுகின்றது.

அதில், தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, அம்மாமார்களுக்கான பரீட்சை எனவும் மாணவர்கள் மன ரீதியில் பாதிக்கப்படுகின்றனர் என்பதாலும் அதனை நிறுத்தவேண்டும் என்ற கருத்துக்கள் பொதுவெளியில் பரவலாக முன்வைக்கப்பட்டன. எனினும், இறுதித் தீர்மானம் எட்டப்படாமல் இவ்வருடமும் அந்தப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறியமுடிகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில், தீர்மானிக்கப்படும் வெட்டுப்புள்ளிக்கு மேல், புள்ளிகளை எடுக்கும் மாணவர்கள், நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்வது குதிரைக் கொம்பாகவே இன்னுமிருக்கின்றது. எனினும், பல சவால்களுக்கு முகங்கொடுத்து, அடுத்த கட்டத்துக்குக் காலடி எடுத்துவைக்கும் மாணவர்கள், கல்விப்பொதுத் தராதரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு கீழே புள்ளிகளை எடுத்த மாணவர்களும் சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

ஆக, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு பெரும் சுமையாகவே உள்ளது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், இன்றுடன் (05) நிறைவடையும், 2023/2024 ஆம் ஆண்டுகளுக்கான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் சிறிய சவாலை எதிர்கொள்ள நேர்ந்தது.

பரீட்சை வினாத்தாளில் சேர்க்கக்கூடாது என்று தடைசெய்யப்பட்ட, பாடவிதானத்தில் உள்ளடக்கப்படாத மற்றும் பாடசாலையில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் தொட்டுக்கூடப் பார்க்காத பாடத்தில் இருந்து ஒருசில வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. அதேபோல, ஆங்கில பரீட்சையிலும் குளறுபடியான கேள்வியொன்று கேட்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்விரு விவகாரங்கள் தொடர்பில் ஆராய்ந்து, பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய தீர்மானமொன்று எடுக்கப்படுமென கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந் தெரிவித்துள்ளார். இது பரீட்சார்த்திகளின் மனங்களில் பாலை வார்த்தாற் போலவே இருக்கும்.

எனினும், இவ்வாறான சிறு, சிறு தவறுகள்கூட ஏற்படாத வகையில், தேசிய பரீட்சைக்கான வினாத்தாள்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். இல்லையேல், முதல்நாள் பரீட்சையில் சிக்கலுக்கு முகங்கொடுக்கும் பரீட்சார்த்தி, அடுத்தடுத்த நாட்களில் இடம்பெறும் பரீட்சைகளில் ஆகக்கூடுதலான கவனத்தைச் செலுத்த முடியாத நிலைமையொன்று ஏற்படும்.

ஆகையால், பரீட்சார்த்திகளுக்கு கவன சிதறலை ஏற்படுத்தும் வகையில், வினாக்களைத் தயாரிக்காமல் விடுவதே சிறந்தது. அதற்கான முயற்சியில் ஈடுபடுவதே உசிதமாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






# வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கையுடன் நாமே தேடும் ஆதாயங்கள் உண்மை வழியில், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால் அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்தத் தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன் பற்றியும் கவனமெடுக்கவேண்டும்.

நீங்கள் சரியாக நடந்தால் உங்களை நோக்கி ஒரு பெருங்கூட்டமே இணைந்து வரும். லாபம் என்பது வெறும் பணம் அல்ல. மக்களை நேசிப்பதால் வரும். அன்பினால் கிடைத்த வரவுகளாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்புமாகும். பிறரைத் தூக்கிவிடாதவனும், தன்னை மட்டும் கவனிப்பவனும், எவரது வளர்ச்சியைத் தடுப்பவனும் உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதைச் சகல அரசுகளும் உணரவேண்டும். எமக்கே எல்லாம் எநன எந்த வல்லரசும் பேராசை கொண்டால். என்ன நடக்கும். என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்த புவனம் உணர்க.

- பருத்தியூர் பால. வைரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# வறுமையில் இலாபம் தேடும் அரசியல்

அடுத்த ஜனாதிபதித் தேர்தல், இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 7ஆம் திகதி அறிவித்தது. இதில் ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா? இல்லை என்றே நாம் நினைக்கிறோம். ஏனெனில், தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்காக இந்தக் காலப்பகுதியை தீர்மானிக்கவில்லை. அது சட்டத்தாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடையும் நாளிலிருந்து பின்னோக்கி இரண்டு மாதங்களுக்கும் ஒரு மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும் என்று அரசியலமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ 2019 நவம்பர் 18ஆம் திகதிபதவிப் பிரமாணம் செய்துகொண்டார். அவர் 2022இல் நாட்டை விட்டுத் தப்பியோடிய பின்னர் ரணில் விக்ரமசிங்க அவரது பதவிக்காலத்தின் மிகுதி காலத்திற்காகப் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டார்.

கோட்டா பதவியில் தொடர்ந்தும் இருந்திருந்தால் அவரது பதவிக் காலம் 2024 நவம்பர் 18ஆம் திகதி முடிவடைகிறது. எனவே, ரணிலின் பதவிக் காலமும் அதே திகதியில் முடிவடைகிறது. அன்றிலிருந்து முன்னோக்கி இரண்டு மாதங்கள் என்றால் 2024 செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதியாகும். அதிலிருந்து பின்னோக்கி ஒரு மாதம் என்றால் 2024 ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதியாகும்.

அதாவது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த இரண்டு நாட்களுக்கிடையில் நடைபெற வேண்டும். அது தான் சட்டமாக இருக்கிறது. அதைத் தான் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த அறிவித்தலில் புதிதாக எதுவும் இல்லை. ஆனால், ஆணைக்குழு எதிர்வரும் ஜூலை மாதம் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாளை ஜனாதிபதித் தேர்தலுக்கான சரியான திகதியாக அறிவிக்க வேண்டும். அதனை அடுத்தே ஜனாதிபதித் தேர்தல் காலம் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தான் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ, முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்று அடம்பிடிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அதற்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதானால் அதற்கு அரசியலமைப்பைத் திருத்த வேண்டும். அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பொதுஜன முன்னணிக்கு இருக்கிறதா என்பது சந்தேகமாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. பிரதான கட்சிகளில் வேறு எவரும் போட்டியிடுவதாக இன்னமும் உறுதியாக உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொதுப் பணத்தில் மக்களைக் கவரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கவனிக்கும் போது அவரும் போட்டியிடுவார் போல்தான் தெரிகிறது.

ரணில், பொதுப் பணத்தைப் பயன்படுத்தி அரசியல் செய்வது இப்போது அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது. ஏற்கெனவே தேர்தல் கண்காணிப்புக் குழுவான சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை (People's Action for Free and Fair Elections -PAFFREL) ஜனாதிபதி விக்ரமசிங்க பொதுப் பணத்தில் மக்களுக்கு இலஞ்சம் வழங்கி தேர்தல் பணிகளில் ஈடுபடுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது. உண்மையிலேயே கோட்டு-சூட்டு அணிந்து பெரிய மனிதர்களாக மக்கள் முன் தோன்றும் அரசியல்வாதிகள், பொதுப் பணத்தில் தமது அரசியலை நடத்துவதானது வெட்கக்கேடான விடயமாகும்.

வறிய மக்களுக்கு நிவாரணமாக மாதாந்தம் ஒரு தொகை பணம் வழங்குவதற்காக அஸ்வெஸ்ம என்றதொரு திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இது சர்வதேச நாணய நிதியத்தின் வறிய மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு (social safety net) கீழ் வழங்கப்படுவதாகும். இதனை வழங்கும் போதும் அரசியல்வாதிகள் தலையிட்டு அரசியல் இலாபம் தேட முயல்கிறார்கள்.

அதற்குப் புறம்பாக அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு 27 இலட்சம் வறிய குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ கிராம் வீதம் அரிசி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. மக்களின் வறுமையைப் போக்க எவ்வகையிலும் உதவாத இந்த திட்டம் அரசியல் இலஞ்சம் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. காணியற்ற மக்களுக்குக் காணி வழங்கும் 'உரிமை" என்றதொரு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற குடும்பங்கள் 50,000க்கு அவர்கள் தற்போது வாழும் வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்க கடந்த நவம்பர் மாதம் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. அது கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 89 பிரதேச செயலக வட்டாரங்களில் தோட்டப்புற மக்களுக்காக 10,000 வீடுகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 800,000 ஏழை மாணவிகளுக்கு விடாய்க்கால நப்கின்களை (Sanitary napkins) வழங்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இவற்றைத் தான் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்காக அரசாங்கம் மக்களுக்கு வழங்கும் இலஞ்சமாக பெஃப்ரல் (PAFFREL) அமைப்பு குறிப்பிட்டு இருக்க வேண்டும்.

தேர்தலொன்று நெருங்கி வரும் நிலையில், அரசியல் கட்சிகள் இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவ்வமைப்பு கடந்த 3ஆம் திகதி ஊடகங்களிடம் கூறியிருந்தது. அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளுக்கு என பிரதேச சபை வட்டாரங்களுக்கு பத்து இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கியிருக்கிறது. அப்பணத்தை எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்பதை மாகாண ஆளுநரே முடிவு செய்வார். ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்பது சகலரும் அறிந்த விடயமாகும். அதாவது இப்பணம் தேசிய ரீதியிலான திட்டமொன்றுக்கு இணங்க செலவழிக்கப்படாது, பிரதேச ரீதியில் ஜனாதிபதியின் அரசியல் திட்டங்களுக்கு இணங்க செலவழிக்கப்படும் என்பது தெளிவான விடயமாகும்.

இதனை சுட்டிக்காட்டும் பெஃப்ரல் அமைப்பு, இப்பணத்தை அரச இயந்திரத்தைப் பாவித்தே அரசியல்வாதிகளின் நலனுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன், அவ்வமைப்பு இந்த விடயம் தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னணியிலும் ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறவிருக்கும் நிலையிலும், இந்த நடவடிக்கைகள் நடைபெறுவதாக அவ்வமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த வருடம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்ட போதிலும், அவை இரத்து செய்யப்படவில்லை என்றும், எனவே, தற்போது தேர்தல் கால சட்டங்கள் செல்லுபடியாகின்றன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கான அவ்வமைப்பின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்துத் தேர்தல்கள் ஆணைக்குழு இந்த முறைப்பாட்டைப் பற்றி ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்துள்ளது. இது போன்ற திட்டங்கள் அமுலாக்கும் போது, அரசியல்வாதிகள் அவற்றில் கலந்து கொள்வதைத் தடுக்க வேண்டும் என்று ஆணைக்குழு ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்துள்ளது. ஆயினும், இந்நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை என்பதையும் நாகரிகமற்றவை என்பதையும் ஜனாதிபதியும் அவரது அதிகாரிகளும் நன்கறிவர். எனவே தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் எவ்வகையிலும் பயனளிக்கப் போவதில்லை என்பது திண்ணமாகும்.

இவற்றை மட்டுமல்லாது சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளையும் ஜனாதிபதி தமது அரசியலுக்காக உபயோகிக்கிறார். பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திலிருந்து நாட்டை பாதுகாக்க முன்வராது எல்லோரும் பின்வாங்கிய நிலையில் தாம் மட்டும் அச்சமின்றி முன்வந்ததாகவும் அதன் மூலம் தாம் நாட்டை பாதுகாத்ததாகவும் ஜனாதிபதி கூறி வருகிறார். இது உண்மையல்ல.

2022ஆம் ஆண்டு, குண்டர்கள் காலிமுகத் திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கியதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிலிருந்து இராஜினாமா செய்தார். அதனை அடுத்தே ரணில் பிரதமராகப் பதவியேற்றார். ஆயினும் அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் சற்று தாமதித்து பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என்று அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளித்த கோட்டா? ஏற்கெனவே தாம் ரணிலுக்கு வாக்குறுதி அளித்துவிட்டதாக சஜித்திடம் தெரிவித்திருந்தார்.

அதேபோல் தாம் விரும்பிய 15 பேரை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டு ஆட்சியை நடத்தத் தயார் என்று அனுர குமார திஸாநாயக்கவும் பகிரங்கமாக அறிவித்து இருந்தார். அதற்கு கோட்டா எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

பின்னர் கோட்டா, நாட்டை விட்டுத் தப்பியோடியதையடுத்து, பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு எதிராக அனுரகுமாரவும் டலஸ் அலஹப்பெருமவும் போட்டியிட்டனர். அவர்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த நாட்டின் பொறுப்பை ஏற்கத் தயார் என்பதாலேயே அவ்வாறு போட்டியிட்டனர். எனவே, நாட்டை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை என்று ஜனாதிபதி இப்போது கூறுவது எவ்வகையிலும் உண்மையல்ல.

அதேவேளை, கோட்டா ஆரம்பித்த சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் மூலம் கிடைத்த வெளிநாட்டுக் கடன்கள் மூலமே எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமான தட்டுப்பாடு நீங்கி தற்போது நாட்டின் நிலை சற்று சீராகியுள்ளது. இது அபிவிருத்தி அல்ல. ஆனால், ஜனாதிபதி அதனை அபிவிருத்தியாக எடுத்துக் காட்டி அரசியல் இலாபம் தேடுகிறார்.

# கடிதங்கள்

## பாழடைந்த மலசலக்கூடம்



நோர்வூட் பிரதேச சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் நோர்வூட் நகரில் உள்ள ஒரேயொரு பொது மலசலக்கூடம் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுவதால், நாளாந்தம் ஊருக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வேர்ல்ட் விஷன் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இந்த சகல வசதிகளுடனும் கூடிய மலசலக்கூடம் நோர்வூட் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. நீர் வசதி இல்லாததால், தற்போது கழிவறையிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுகிறது. கழிவறை கதவுகள், கழிப்பறை தொட்டிகள் உடைக்கப்பட்டன.

மலசலக்கூடத்திற்கு முன்பாக அமைந்துள்ள மதுக்கடையில் இரவு நேரங்களில் மது அருந்த வரும் சிலர், கழிவறைக்குள் சென்று மதுபானத்தை அருந்திவிட்டு வெற்றுப் போத்தல்களை போடுகின்றனர். இரவு நேரத்தில் கழிப்பறை மூடப்பட்டாலும், மதுக்கடைக்கு வருபவர்கள் அதை உடைத்துவிட்டு இரவில் கழிப்பறைக்குள் நுழைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், நோர்வூட் நகருக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

- காமினி பண்டார இலங்கதிலக்க

## அற்புதம் நிறைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள்

# வைகாசிப் பொங்கல் விழா



அ.அச்சுதன்











இந்து சமய வழிபாட்டு முறையில் கை மேல் பலன் கிடைக்கும் வழிபாட்டு முறையில் சக்கி வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது. இச் சக்கி வழிபாட்டில் அவரவர் செய்யும் கர்ம பலன்களுக்கு ஏற்ப தோசங்கள் ஏற்படும்போது, அவற்றுக்கான பரிகாரங்களை செய்து வாழ்வில் நல்ல நிலையை அடையச் செய்யும் வழிபாட்டு முறையில் தற்காலத்தில் மேலோங்கி காணப்படுவது நாக தேவதைகளுக்கான வழிபாட்டு முறையாகும்.

அவ்வாறு தோச நிவர்த்தி மற்றும் வேண்டும் அடியவர்களுக்கு வரங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா - நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2055 - குரோதி வருடம் வைகாசித் திங்கள் 06ம் நாள் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி 52 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுலப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறும் ஆரம்பப் பூசை நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

மடைப்பெட்டி, ஊர்வலம், காவடிகள், பூசைப்பெட்டிகள் சகிதம் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் சென்று அவ்விடமிருந்து தூக்கப்படும் காவடிகள் பூசைப்பெட்டிகளோடு பிரதான வீதியூடாக நாகம்மாள் வீதியை வந்தடைந்து முச்சந்தியில் வைக்கப்படும் முச்சந்தி மடையுடன் ஸ்ரீ நாகம்பாள் ஆலயத்தைச் சென்றடையும் ஆலய பிரதம அர்ச்சகர் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் அவர்களால் பக்தி பூர்வமாக மடைப்பெட்டி வளர்ந்துக்கள் கையேற்கப்பட்டுத் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கிழக்கிலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பாரம் பரிய கலை, கலாசார, இலக்கிய சமய வரலாறுகள் வளர்ந்த மண் என வர்ணிக்கப்படும் மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் சேனையூர் எனும் புண்ணிய பதியிலே அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார்.

உலகில் பல்வேறு நாடுகளிலுள்ள வழிபாட்டு முறைகளில் தாம் தரிசிக்கும் தெய்வத்தைக் கண் கூடாகக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் இந்த நாகதேவதை வழிபாட்டில் மட்டுமே காணப்படுவது இதன் சிறப்பாகும். கட்டைபறிச்சான் வடக்கில் அமைந்துள்ள சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயமானது நூற்றிபத்து வருடத்திற்கு மேல் வரலாறு கொண்ட இந்த ஆலயம் வரலாற்றிலே 2 ஆண்டுகள் மட்டுமே எவ்வித பூசை நிகழ்வுகளும் நிகழாமல் இருந்துள்ளது. இதற்கு அப்பகுதியில் இடம் பெற்ற ‘கொடும் யுத்த சூழல்’ காரணமாகும் ஆனால் ஆலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இதுவும் ஆலயத்தின் அற்புதம் என்கின்றார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமில்லாது, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து வரும் சகல பக்த அடியார்களும் இந்த வைகாசிப் பொங்கல் திருவிழா காலத்தில் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்திச் செல்வது வழமை புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து கூட மக்கள் வந்து தமது உறவினர்களின் வீட்டில் தங்கி இத் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம்.

ஆகம ரீதியான பூசை முறைகள் எதுவுமின்றி சடங்கு முறையை மையமாகக் கொண்ட தனித்துவமான வழிபாட்டு முறையைக் கொண்ட இந்த ஆலயத்தின் பூசையானது பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைப்பதுடன், உண்மையான நம்பிக்கையையும், பக்கி பரவசத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கும்.

பல சகாப்தத்திற்கு மேல் பழைமையும், அற்புதங்களும் இடம் பெற்று வரும் இந்த ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பது ஆலயத்தின் மூலஸ்தானமாகும். சிறிய ஆசி வடிவிலான இந்த மூலஸ்தானம் இன்றும் அப்படியே இருக்கிறது. இதன் பின் புறம் ஒரு புற்றும் அதனைச் சுற்றி ஒரு வில் வளைவுடனான சுற்று மதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதிலுக்குள் அமைந்துள்ள புற்று வாயிலாகவே ஆலய அர்ச்சகரால் ‘நாகம்மாளுக்கு பால், பழக் கரைசல் வைக்கப்படும். இப்பால், பழ பூசை காண வைகாசி பொங்கல் நாளில் அடியார்கள் முண்டியடித்துக் காண முயலுவார்கள். அருளுள்ளோர் கண்களுக்கு நாக தெய்வத்தின் அருட்காட்சி கிடைப்பதுண்டு. இந்த அருட்காட்சியில் காணும் நாக தேவதையின் தரிசனம் அருட்பேறு என்றால் அது மிகையாகாது.

**“சேனையூர் பதிக்கே வாருங்கள் – ஸ்ரீ**
**நாகம்மாளைப் போற்றுங்கள்**
**தேனாய் இனிக்கப் பாடுங்கள் – தேவி**
**தரிசனம் தருவாள் பாருங்கள்”**

என்ற பாடலின் மூலம் தேவியின் தரிசனத்தை சேனையூர் கவிக்குயிலன் அவர்கள் இவ்வாலயத்தின் மீது பாடிய பாடல் வரிகள் மூலம் கூறியுள்ளார். இவ் ஆலயத்தின் மூல மூர்த்தியாக நாக சிலையும் எழுந்தருளியாக அன்னை புவனேஸ்வரிக்கு ஐந்து தலை நாகம் குடை பிடித்தாற் போல் காட்சிதர அபயவரதம் காட்டி எழுந்தருளியுள்ளார். மேலும் இங்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர்,சூரிய நாராயணர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பைரவமூர்த்தி, ஆகிய தெய்வங்கள் பரிவாரங்களாகவும், ஆலய உட்பிரவாகத்தில் சக்திவேல், ஸ்ரீ சந்தான கோபால் சுவாமியும் வழிபடப்படுகின்ற தேவதைகளாகக் காட்சி தருகின்றனர்.

ஆலய அர்ச்சகர் மஞ்சள் நிறத்துணியினால் வாய், மூக்கு காதுகளைக் கட்டிக் கொண்டே நாகதேவிக்குரிய சகல பூசை வழிபாடுகளையும் செய்து வருகின்றார். சர்ப்பம் தீண்டியவர்களுக்கு, விசக்கடி சம்பந்தமான நோயாளர்களுக்கும், புத்திர பாக்கியமற்றோர், திருமணத் தடையுடையோர் ஆகிய தோஷமுள்ளோர்களுக்குப் பரிகாரங்கள் அர்ச்சகரால் மேற்கொள்ளப்படும்.

தாம் அன்னையிடம் வேண்டி நேர்த்திக்கடன் வைக்கும் அடியார்கள் தமது வேண்டுதல் நிறைவேறிய பின் அந்த நேர்த்திக் கடனை செலுத்துவதற்காக இத் திருவிழா காலத்தில் பெருந்தொகையானவர்கள் ஆலயத்தை நாடி வருவதை அவதானிக்கலாம்.

திருவிழாக் காலங்களை விட ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்தில் விசேடமான பூசைகள் இடம்பெறும்.

இவ்வாலயத்தில் கட்டப்படும் மஞ்சள்நிற வேளை நூலுக்கு மிகவும் மகத்துவமான சக்தியுள்ளது. என அடியார்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடத்திற்கு ஒரு நாள் இடம் பெறும் வைகாசிப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான நாகம்மாளின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களை அன்போடு அழைக்கின்றனர் ஆலய அறங்காவல் சபையினர்.

மேற்படி விழாவன்று கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும், சைவ நற்சிந்தனையும் இடம்பெறுகின்றமையும், மதிய வேளை அன்னதானமும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பாலை குருந்தையும், பாங்குடன் ஆலையும்
பக்கமெல்லாம் மரச்சோலைகளும்
கூடியே வீதியைக் கூடாரம் போற்சுற்றி
கூட்டமாய் நிற்பதைக்காண நீவீர்
சேனையூர்ப் பதிக்கே வாருங்கள் நாக
தேவி தரிசனம் தருவாள் பாருங்கள்
என்ற பாடல் அற்புதமானது.

# சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை






சந்நதி கதிர்காமம் பாத யாத்திரை குழுவினர் மூன்று நாட்களில் பளையை சென்றடைந்துள்ளதுடன், அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை (11) அன்று இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை (14) அன்று நான்காவது நாள் குழுவினர் இயக்கச்சி சென்று ஆனையிறவு பாலத்தினூடாக உமையாள்புரத்தைச் சென்றடைந்தனர்.

இதேவேளை, தினங்கட்கிழமை (13) மூன்றாவது நாள் அன்று துர்காபுரம் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து பளை அம்மன் கோவிலை சென்றடைந்து.

தொடர்ந்து, பாதயாத்திரை குழுவினர் மீண்டும் பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தை சென்றடைந்தனர்.

பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் பலத்த வரவேற்பைப் பெற்றது. அங்கு ஓம் ரீவீ நிறுவனத்தினர் பாத யாத்திரீகர்களுக்கு பொதிகளை வழங்கியுள்ளனர்.

- வி.ரி.சகாதேவராஜா




## கணேஷா அறநெறி மாணவர்களின்

# விளையாட்டு விழா

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல அறநெறி பாடசாலைகளில் ஒன்றான திருக்கோவில், விநாயகபுரம் ஸ்ரீ கணேஷா அறநெறி பாடசாலை பிள்ளைகளின் பாரம்பரிய கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றன.

ஸ்ரீ கணேசா அறநெறி பாடசாலை நடத்திய இச்சித்திரை விளையாட்டுப் போட்டி நிகழ்வானது, சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவாக, திருக்கோவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் (கண்ணன்) மற்றும் திருக்கோவில் கோட்ட கல்விப்பணிப்பாளர் சோ.ரவீந்திரன், ஆசிரியர்களான ஜனா, தர்மசீலன் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# கல்யாணக்கால் நடப்பட்டது

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு திங்கட்கிழமை (13) மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.


பாரம்பரிய மரபு முறைப்படி பறைமேளம் அடித்து கடற்கரைக்குச் சென்று அங்கு விசேட பூஜை இடம் பெற்று கடல் தீர்த்தம் எடுக்கப்பட்டது.


அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளைச் செய்து உரிய வேளையிலே அரோகரா கோஷம் மற்றும் குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் உணர்ச்சிப்பூர்வமாகச் சிறப்பாக நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சாரிகளை அம்மனின் கல்யாண காலுக்குச் சாத்தி வழிபட்டார்கள். மேலும் பலகாரங்கள் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து வழிபட்டார்கள்.

ஆலய தர்ம கர்த்தாக்களான பரமலிங்கம் இராஜமோகன், இரா.குணசிங்கம், சா.கங்காதரன் தலைமையில் இம்முதல் நாள் சடங்கு சிறப்பாக நடைபெற்றது.









இருபதுக்கு-20 உலகக் கிண்ணத்துக்கு

# புறப்படும் கிரிக்கெட் அணிக்கு வாழ்த்து



அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் ஜூன் 01ஆம் திகதி முதல் ஜூன் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இருபதுக்கு-20 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியில் பங்குபற்றுவதற்காக நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் இலங்கை கிரிக்கெட் அணியினர் திங்கட்கிழமை (13) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

வனிது ஹசரங்க தலைமையிலான 15 வீரர்கள் அடங்கிய இலங்கை கிரிக்கெட் அணி செவ்வாய்க்கிழமை (14) காலை நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளது.

இந்நிலையில், வீரர்களை சந்தித்து ஊக்குவித்த ஜனாதிபதி ரணில், அவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதோடு, நாட்டிற்குச் சிறந்த வெற்றியுடன் வருமாறு அவர்களை வாழ்த்தினார்.



காசா

அமெரிக்காவால் செத்துமடியும் பலஸ்தீனர்கள்

# பகீர் கிளப்பும் முன்னாள் அதிகாரி

காசா மீதான இஸ்ரேலின் யுத்தத்தால் மனமுடைந்து, அமெரிக்காவின் புலனாய்வு பிரிவிலிருந்து இராஜினாமா செய்ததாக, அமெரிக்க புலனாய்வு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் தனது பதவியை இராஜினாமா செய்த இராணுவ மேஜர் ஹரிசன் மான், இது குறித்து தனது சகாக்களிற்கு எழுதியுள்ள கடிதத்தில், தனது இராஜினாமாவுக்கான காரணத்தை குறிப்பிட்டுள்ளார்.

அதில், “எனது இராஜினாமாவிற்கான காரணங்களை அச்சம் காரணமாக நான் பல மாதங்களாக தெரிவிக்கவில்லை. தொழில்முறை விதிமுறைகளை மீறுவது, நான் பெரிதும் மதிக்கும் எனது சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்துவது, நான் துரோகம் செய்துவிட்டேன் என நீங்கள் கருதுவீர்கள் என பல அச்சங்களால் இராஜினாமாவிற்கான காரணத்தை முதலில் தெரிவிக்கவில்லை.

மேலும், அத்துடன், காசா மீதான தாக்குதல்களில் பலஸ்தீனியர்கள் பாரியளவில் படுகொலை செய்வதற்கு காரணமான அமெரிக்காவின் கொள்கைகளை முன்னெடுக்க, நானும் உதவுகிறேன் என்பதை உணர்ந்து வெட்கம் அடைந்தேன். இதன் காரணமாகவே எனது பதவியை இராஜினாமா செய்தேன. இது குறித்த குற்றவுணர்வினால் மிகவும் பாதிக்கப்பட்டேன்” எனவும் அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தெற்கு அவுஸ்திரேலியா

சிறுவர்கள் சமூக ஊடகங்களை

# பயன்படுத்த தடை

தெற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களை பயன்படுத்தாதவர்களே இல்லை என்ற அளவுக்கு, அது முக்கிய பங்கு வகிக்கிறது.

குறிப்பாக சிறுவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் மன



வளர்ச்சிக்கு சமூக ஊடகங்கள் பெரும் தீங்கு விளைவிக்கிறது. எனவே, முதன்முறையாக தெற்கு அவுஸ்திரேலியா மாகாணத்தில் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதித்து முதலமைச்சர் பீட்டர் மலினஸ்காஸ் அறிவித்துள்ளார்.

அதன்படி, சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த பெற்றோரின் ஒப்புதல் அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடைமுறையை ஆராய உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி தலைமையிலான ஒரு குழுவையும் அரசாங்கம் நியமித்துள்ளது. இந்நிலையில், இந்த அறிவிப்புக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஈராக்

ஈராக் இராணுவம் மீது

# ஐ.எஸ்.ஐ.எஸ். அதிரடி தாக்குதல்



ஈராக் கிழக்கு பகுதியில் உள்ள இராணுவ நிலையின் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவ அதிகாரிகள் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இத்தாக்குதல் கிராமப்புறப் பகுதியான தியாலா மற்றும் சலாவுதீன் மாகாணங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் ஈராக் கமாண்டர் அதிகாரி மற்றும் நான்கு வீரர்களே உயிரிழந்துள்ளடன் ஐந்து வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# ஐ.பி.எல்: வெளியேற்றப்பட்ட குஜராத் டைட்டான்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறும் வாய்ப்பை குஜராத் டைட்டான்ஸ் இழந்தது.

கொல்கத்தா நைட் றைடர்ஸுக்கெதிரான குஜராத்தின் நேற்றிரவுப் போட்டியானது மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில், 13 போட்டிகளில் விளையாடி 11 புள்ளிகளுடன் குஜராத் காணப்படுகின்றது.

புள்ளிகள் பட்டியலில் நான்காமிடத்தில் காணப்படும் சண்றைசர்ஸ் ஹைதரபாத் 14 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், தமது எஞ்சிய போட்டியில் வென்றாலும் 13 புள்ளிகளையே அதிகபட்சமாக குஜராத்தால் பெற முடியுமென்ற நிலையிலேயே தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறும் நிலையை இழந்தது.

இதேவேளை மேற்குறித்த போட்டியைத் தொடர்ந்து 19 புள்ளிகளை கொல்கத்தா




பெற்றுள்ள நிலையில், புள்ளிகள் பட்டியலில் முதலிரண்டு இடங்களுக்குள் வருவதை உறுதிப்படுத்தியுள்ளது. ஏனெனில் ஹைதரபாத்துக்கு இன்னும் இரண்டு போட்டிகள் இருக்கின்ற நிலையிலேயே அவ்வணி அவ்விரண்டு போட்டிகளில் வென்றாலும் அதிகபட்சமாக 18 புள்ளிகளையே பெறுமென்ற நிலையிலேயே முதலிரண்டு இடங்களுக்குள் வருவதை கொல்கத்தா உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கௌகாத்தியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பஞ்சாப் கிங்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் – அஸ்தன் வில்லா

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், லிவர்பூலுக்குமிடையிலான போட்டியானது 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 85 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 79 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லிவர்பூலும்,




68 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

உலகக் கிண்ணத்துக்கான

# பங்களாதேஷ் குழாம் அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உப அணித்தலைவராக தஸ்கின் அஹ்மட் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழாம்: தன்ஸிட் ஹஸன், லிட்டன் தாஸ், சௌமியா சர்கார், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), தெஹிட் ஹிரிடோய், மகமதுல்லா, ஜாகர் அலி, ஷகிப் அல் ஹஸன், மஹெடி ஹஸன், தன்வீர் இஸ்லாம், ரிஷாட் ஹொஸைன், தஸ்கின் அஹ்மட் (உப அணித்தலைவர்), ஷொரிஃபுல் இஸ்லாம், முஸ்தபிசூர் ரஹ்மான், தன்ஸிம் ஹஸன் சகிப். மேலதிக வீரர்கள்: அஃபிஃப் ஹொஸைன், ஹஸன் மஹ்மூட்




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.